# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

# பாராளுமன்றம்

---

# 1983 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க, இலங்கை (பாராளுமன்றத் தேர்த்தல்கள்) அரசப் பேரவைக் கட்டளை (திருத்தச்) சட்டம்

---

*[1983, ஒத்தோபர் மாதம் 26 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

*1983, ஒத்தோபர் மாதம் 28 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

---

*கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.*

*விலை : சதம் 20* *தபாற் செலவு : சதம் 50*

**1983 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க, இலங்கை (பாராளுமன்றத் தேர்தல்கள்) அரசப் பேரவைக் கட்டளை (திருத்தச்) சட்டம்**

[1983, ஒத்தோபர் மாதம் 26 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ.—ஓ. 37/83
1590

**1946 ஆம் ஆண்டின் இலங்கை (பாராளுமன்றத் தேர்தல்கள்) அரசப் பேரவைக் கட்டளையைத் திருத்துவதற்கான ஒரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டமானது, 1983 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க, இலங்கை (பாராளுமன்றத் தேர்தல்கள்) அரசப் பேரவைக் கட்டளை (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். **சுருக்கப் பெயர்.**

2. ஆயிரத்துத் தொளாயிரத்து நாற்பத்தாறும் ஆண்டின் இலங்கை (பாராளுமன்றத் தேர்தல்கள்) அரசப் பேரவைக் கட்டளையின் 28 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவினை உடனடுத்துப் பின்வரும் உட்பிரிவினை உட்புகுத்துவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :— **381 ஆம் அத்தியாயத்தின் 28 ஆம் பிரிவைத் திருத்துதல்.**

"(4அ) அரசியலமைப்பின் 161 ஆம் உறுப்புரையின் (ஈ) என்னும் பந்தியின் (iii) ஆம் உப்பந்தியின் ஏற்பாடுகளின்கீழ் நடாத்தப்படவுள்ள தேர்தலொன்றில் வேட்பாளர் ஒருவரின் பெயர்நியமனத்துக்கான பெயர்நியமனப்பத்திரம் ஒவ்வொன்றுடனும், வேட்பாளரினால் விடயத்துக்கேற்றுற்போல, செய்து கீழொப்பமிடப்பட்ட அல்லது மொழிந்து கீழொப்பமிடப்பட்ட அரசியலமைப்புக்கான ஏழாம் அட்டவணையில் தரப்பட்டுள்ள படிவத்திலான, விடயத்துக்கேற்றுற்போல சத்தியமொன்று அல்லது உறுதியுரையொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

அத்தகைய தேர்தலில் தெரிவத்தாட்சி அலுவலர் ஒவ்வொருவரும் இவ்வுட்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளுடன் இணங்கியொழுகாத பெயர்நியமனப்பத்திரம் எதனையும் நிராகரித்தல் வேண்டும். ".

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 150; (வெளிநாடு) ரூபா 200 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்காய சந்தாப்பணம் அத்தியட்சர், அரசாங்க வெளியீட்டலுவலகம், த. பெ. இல. 500, கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.